# 24-05-2024 செய்தி

## சட்டத்தின் பெயரால் சிக்கலா?

- காட்டுயிர் பாதுகாப்புத் திட்டம் 2002 தேசியச் சுற்றுச்சூழல் கொள்கை 2006 ஆகியவற்றின் அறிவுறுத்தலின்படி, தேசியப் பூங்கா, சரணாலயம் போன்ற பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் எல்லையிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள பகுதிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986இன்படி, சூழலியல் கூருணர்வு மண்டலமாக (Eco Sensitive Zone) அறிவிக்கப்பட வேண்டும்.
- இது அப்பகுதிகளின் சூழல் நலனைப் பாதுகாக்கும் ஒரு முக்கிய முன்னெடுப்பு. பல மாநிலங்கள் இந்த 10 கி.மீ. சூழலியல் கூருணர்வு மண்டலம், பல வளர்ச்சித் திட்டங்களைப் பாதிக்கும் என ஆட்சேபம் எழுப்பியதால்.
- தேசிய காட்டுயிர் வாரியம் அந்தந்தப் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு ஏற்றவாறு சூழலியல் கூருணர்வு மண்டலத்தின் எல்லையை மாநிலங்கள் நிர்ணயித்துக்கொள்ளலாம் என அறிவித்தது. அவ்வாறு குறிப்பிட்டு வரையறுக்கப்படாத பகுதிகளின் எல்லைகளிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளவை இயல்பாகவே சூழலியல் கூருணர்வு மண்டலமாகக் கருதப்பட்டுவருகின்றன.
- அதன்படி, அங்குள்ள நிலப்பரப்பில் தடை செய்யப்பட்ட, முறைப்படுத்தப்பட்ட, அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.
- சுரங்கங்கள், மர அறுவை ஆலைகள், காற்று, நீர், ஒலி, நில மாசுபாடுகளை ஏற்படுத்தக்கூடிய தொழிற்சாலைகள், நீர்மின் திட்டங்கள், அபாயகரமான பொருள்களை உற்பத்தி செய்தல், கழிவுகளை நீர்நிலைகளில்-நிலங்களில் வெளியேற்றும் செயல் போன்றவை முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளன.
- மரங்களை வெட்டுதல், உணவகங்கள்/தங்கும் விடுதிகள் அமைத்தல், நிலத்தடி நீர் உள்பட பிற நீர் ஆதாரங்களைப் பயன்படுத்துதல் போன்றவை முறைப்படுத்தப்பட்டுள்ளன.

**பழவேற்காடு ஏரி/பறவைகள் சரணாலயம்**

- பழவேற்காடு ஏரி, தமிழ்நாடு-ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்குக் கடற்கரையால் அமையப் பெற்ற, சூழலியல் மீன்பிடித் தொழில் சார்ந்த சமூகப் பொருளாதார முக்கியத்துவம் ஒருங்கமைந்த ஓர் ஏரி.
- 600 ஆண்டுகளைக் கடந்து நிலைத்திருக்கும் இந்த ஏரி, பல்வேறு அச்சுறுத்தல்களைச் சந்தித்து வருகிறது. அதன் அலையாத்திக் காடுகளின் அடர்த்தி சுருங்கி வருவது,
- பெரு வணிக இறால் பண்ணைகளின் மாசு ஏற்படுத்தும் செயல்பாடு, நீர்-மண்வளச் சுரண்டல் இவற்றோடு தற்போது நாட்டின் உள்கட்டமைப்பு வளர்ச்சி-உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதல் என்ற பெயரில், சுற்றுச்சூழல்-சமூக, பொருளாதாரத் தாக்கங்களை ஏற்படுத்தவது அவற்றுள் முக்கியமானவை.
- இந்த ஏரி பலவகை வலசைப் பறவைகளுக்கு இருப்பிடமாகவும் இருப்பதால், இதனைக் காட்டுயிர் (பாதுகாப்பு) சட்டம் 1972இன் கீழ் பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயம் என 1980இல் தமிழ்நாடு அரசு அறிவித்தது.
- இவ்வாறு ஒரு பகுதியைச் சரணாலயமாக அறிவித்ததும் வனத்துறை உள்பட, மாவட்ட நிர்வாகம் சில முக்கிய நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.
- அதன்படி அச்சரணாலயத்தின் எல்லைகளைத் தீர்க்கமாக வரையறுப்பது, அப்பகுதி மக்களின் நில உரிமைகள் பற்றிய ஐயங்களைத் தீர்த்துவைப்பது, சூழலியல் கூருணர்வு மண்டலத்தின் எல்லையை வரையறுப்பது போன்ற நடைமுறைகளை மேற்கொள்வது அவசியம்.
- ஆனால், இன்றுவரை சரணாலயத்தின் அருகமைந்த சில பகுதிகளும், 13 கிராமங்களுமே அதன் தோராய எல்லைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன.

**ஏன் நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை?**

- பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டு 18 ஆண்டுகள் கழித்து, 1998 இல் திருவள்ளூர் மாவட்ட அரசிதழில் இது பறவைகள் சரணாலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டது.
- இருந்தும், அதன்பின் கடைப்பிடிக்கப்பட வேண்டிய முக்கிய நடைமுறைகளை வனத் துறையும், மாவட்ட நிர்வாகமும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிகிறது.
- தீர்க்கமான எல்லைகளை வரையறுக்க, சரணாலயப் பகுதிக்குள் இருக்கும் மக்களின் நில உரிமைகள் சார்ந்த நடைமுறைகள் இன்றளவும் முடிக்கப்படவில்லை.
- இதனால், சரணாலய எல்லையிலிருந்து 10 கி.மீ. வரையுள்ள பகுதிகள் சூழலியல் கூருணர்வு மண்டலமாக இருக்கின்றன. இதனால், சுற்றுச்சூழல் தாக்கம் ஏற்படுத்தவல்ல பெருந்திட்டங்களை இங்கு செயல்படுத்த முடியாத சூழல் நிலவுகிறது.

**தற்போது ஏன் வேகம் காட்டப்படுகிறது?**

- பழவேற்காடு ஏரிப் பறவைகள் சரணாலயத்தின் சூழலியல் கூருணர்வு மண்டலத்தில் தொழில் பூங்கா அது தொடர்புடைய கட்டுமானப் பணிகளுக்கும், மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் சிவப்புப் பிரிவின் கீழ் உள்ள அதிக மாசு ஏற்படுத்தவல்ல சில தொழிற்சாலைகளின் கட்டுமானத்துக்கும், விரிவாக்கத்துக்கும் திட்டமிடப்படுவதாகத் தெரிகிறது.
- இதன் தொடர்ச்சியாக மாநிலக் காட்டுயிர் வாரியத்தின் பரிந்துரைப்படி, தேசிய காட்டுயிர் வாரியம் இப்பணிகளுக்கு ஒப்புதல் வழங்கும் வண்ணம் பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயத்தின் தீர்க்கமான பரப்பளவையும், அதன் சூழலியல் கூருணர்வு மண்டல எல்லையையும் வரையறுக்க தமிழ்நாடு அரசுக்குப் பரிந்துரைக்கிறது.

## தைவானைச் சுற்றிலும் சீனா போர் ஒத்திகை

- தைவானின் பிரிவினைவாத நடவடிக்கைகளுக்கு தண்டனையாக இந்தப் போர் ஒத்திகை மேற்கொள்ளப்படுகிறது.
- மேலும், சீனாவில் உள்விவகாரங்களில் ஒன்றான தைவான் விவகாரத்தில் தலையிடும் அந்நிய சக்திகளுக்கு எச்சரிக்கை விடுப்பதற்காகவும் இந்தப் போர் ஒத்திகை நடத்தப்படுகிறது.
- 1949-ஆம் ஆண்டில் முடிந்த உள்நாட்டுப் போருக்குப்பிறகு தைவான் பிரதேசம் சுதந்திரமாக செயல்பட்டுவருகிறது.
- எனினும், அந்தத் தீவை தங்கள் நாட்டின் ஒரு பகுதியாகவே சீனா கருதுகிறது. தைவானும் தன்னை தனி நாடாக இதுவரை பிரகடனப்படுத்திக் கொள்ளவில்லை.
- தைவானை எப்போது வேண்டுமானாலும் தங்களுடன் இணைத்துக் கொள்ளும் உரிமை தங்களுக்கு உள்ளதாக சீனா கூறிவருகிறது.
- தேவைப்பட்டால் ராணுவ வலிமையைக் கூட இதற்காகப் பயன்படுத்தலாம் என்று சீனா கூறுகிறது.
- இந்தச் சூழலில், தைவானை தனி நாடாக அங்கீகரிக்கும் வகையில் அந்தப் பகுதிக்கு அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டு தலைவர்களோ உயரதிகாரிகளோ வந்தால் அதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துவருகிறது.
- தனது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக தைவானைச் சுற்றிலும் போர் ஒத்திகையை சீனா நடத்தி வருகிறது.